# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணையதளம் www.tnsec@tn.nic.in

---

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 5/2011** **நாள். 22.09.2011**

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் **21.09.2011** அன்று உள்ளாட்சித் தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு இன்று முதல் **(22.09.2011)** வேட்பு மனுக்கள் அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர்களால் பெறப்படுகின்றன. மாதிரி நன்னடத்தை விதிகள் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. தேர்தல் மாதிரி நன்னடத்தை விதிகளை செம்மையாக நடைமுறைப்படுத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித்தலைவர்கள், சென்னை மாநகராட்சி ஆணையாளர் மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நடைபெற உள்ள உள்ளாட்சித் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற வேண்டுமென மாநிலத் தேர்தல் ஆணையம் உறுதி பூண்டுள்ளது. இதை நிறைவேற்றும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க **26.09.2011** அன்று காவல் துறை உயர் அலுவலர்களுடனான கூட்டம் தமிழ் நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்